நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 647/2024

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | வள்ளி |
| தந்தை / கணவர் பெயர் | : | செல்வம் |
| கிராமம் | : | மாதையன்குட்டை |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 46 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 20–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.53PM.

1. நான் தற்போது மாதையன்குட்டையில் குடியிருந்து கட்டிட வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் அ.சா.1 குமரசேன் எனது அண்ணன் ஆவார். இந்த வழக்கில் இறந்தபோன மாரியம்மாள் எனது தாயார் ஆவார். மாதையன்குட்டை பேருந்து நிறுத்தம் அருகே சுமார் 2 வருடங்கள் முன்பாக காலை 8.00 மணிக்கு டீ

குடிக்க சென்ற எனது அம்மா மாரியம்மாள் மீது இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக பக்கத்து வீட்டுக்காரர் நான் வீட்டில் இருக்கும் வந்து தகவல் சொன்னார். தகவல் அறிந்து நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது எனது அம்மா காயங்கள் ஏதும் இல்லாமல் பேசும் நிலையில் தான் இருந்தார். அவரை ஆட்டோ மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை அழைத்து சென்றோம். அன்று மாலை 4.00 மணிக்கு சிகிச்சை பலன் அளிக்காமல் எனது அம்மா இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது அம்மாவுக்கு இரண்டு மகள்கள், மற்றும் மூன்று மகன்கள் உள்ளார்கள். எனது அம்மா தனியாகதான் வசித்து வருகிறார். அவரை நாங்கள் ஐந்து பேரும் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வப்போது சென்று பார்த்து கொள்வோம். எனது அம்மாவுக்கு சுமார் 75 வயது இருக்கும். மேலும் எனது அம்மாவுக்கு கொஞ்சம் கண் குறைபாடு உள்ளது என்றால் சரிதான். மேலும் எனது அம்மாவுக்கு கொஞ்சம் வயது அதிகம் என்பதால் புத்தி சுவாதீனம் இல்லை என்றால் சரிதான். எனது அம்மா கண்கண்ணாடி போடும் பழக்கம் இல்லை என்றால் சரிதான்.

2. விபத்து நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் வீட்டில்தான் இருந்தேன். பாப்பா என்பவர் தகவல் சொல்லிதான் தெரியும். இந்த விபத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. எனது அம்மாவை மருத்துவமனையில் சென்று பார்த்து விட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். போலீசார் எனது அம்மா அடிப்பட்ட இடத்தில் வந்து சுமார் மாலை 6.00 மணி அளவில் என்னை விசாரித்தார். இந்த சம்பவத்தை பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. விபத்தில் இறந்தவர் எனது அம்மா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.11 PM.

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்

நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.